காரணத்தினால், உச்ச நீதிமன்றம் அந்த வழக்கில் உயர் நீதிமன்றத்தை நாடுமாறு தெரிவித்து அந்த வழக்கை dispose செய்திருக்கிறது.

முற்பகல் 11–35

மாநில அரசு உயர் நீதிமன்றத்திலும் தேவையான justification–ஐ, மாநில அரசினுடைய உரிமையை எடுத்துச் சொல்லி, நிச்சயமாக தொடர் நடவடிக்கைகளின் மூலமாக அதைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

4. ஆசிய தடகளப் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழக வீரர்களுக்குப் பரிசுத் தொகை அறிவிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) எப்படி, எந்த விதியில் கேட்கின்றீர்கள்? (குறுக்கீடு) எந்த விதி?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தடகளப் போட்டியிலே சிறந்து விளங்கிய இராணுவ வீரராக இருக்கின்ற திரு. லட்சுமணன் புதுக்கோட்டையைச் சார்ந்தவர் என்று இங்கே குறிப்பிட்டார்கள். தாய் திருநாட்டை காப்பது மட்டுமல்ல, தாய் தமிழகத்திற்கு பெருமை சேர்த்திருக்கின்ற அந்த வீரருக்கு என்ன சிறப்புகளை அளிக்க வேண்டுமோ, அதை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. கவன ஈர்ப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்

2017 ஜூலை 10] [பேரவைத் தலைவர்]

அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பு தொடர்பான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் கோயம்புத்தூர், பெரியகுளம் மற்றும் மகளிருக்கான தோட்டக்கலைக் கல்லூரி திருச்சிராப்பள்ளியிலும் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஒவ்வொரு வருடமும் ஏறக்குறைய 260 மாணவர்கள் பயின்று பட்டம் பெற்று வருகின்றனர். இப்பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கிவரும் பட்டயப் படிப்பு நிறுவனமான பேச்சிப்பாறையில் ஆண்டுதோறும் ஏறக்குறைய 40 மாணவர்கள் தோட்டக்கலைப் பட்டயக் கல்வி பெற்று வருகின்றனர். மேலும், இப்பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கிவரும் இணைப்புக் கல்லூரியான ஆதிபராசக்தி தோட்டக்கலைக் கல்லூரியில் வருடா வருடம் 100 மாணவர்கள் பயின்று தோட்டக்கலை (இளங்கலை) பட்டம் பெற்று வருகின்றனர். ஆக, தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் மூன்று தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களிலும், பேச்சிப்பாறை ஆராய்ச்சி நிலையத்திலுள்ள தோட்டக்கலைப் பட்டயப் படிப்பு நிறுவனத்திலும் ஆண்டுதோறும் ஏறக்குறைய 1,040 மாணவர்கள் தோட்டக்கலைக் கல்வியைப் பயின்று வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு உயரிய விதை ரகங்கள் வருடா வருடம் இப்பல்கலைக்கழகத்திலிருந்து வெளியிடப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

2. தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை சீரிய முறையில் மேற்கொள்ளவும், மேலும் தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சிப் பணிகள் வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ள உழவர்களுக்குத் தேவையான நவீன வேளாண் யுக்திகளை வழங்க ஏதுவான பணிகள் இப்பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கிவரும் தமிழகத்தில் கொடைக்கானல், ஏற்காடு, தடியன்குடிசை (திண்டுக்கல்), பேச்சிப்பாறை, உதகமண்டலம் ஆகிய இடங்களிலுள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்களும், தேனி மாவட்டம் மலிங்காபுரத்தில் திராட்சை ஆராய்ச்சி நிலையமும், திருநெல்வேலி மாவட்டம், வணிக்கோனேந்தலில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

3. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் மேற்கூறிய நான்கு தோட்டக்கலைக் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் பாப்பாரபட்டி, சந்தியூர், திண்டிவனம், விரிஞ்சிபுரம் ஆகிய நான்கு இடங்களில் செயல்பட்டுவரும் வேளாண் அறிவியல் நிலையங்களில் (KVK) சிறந்த முறையில் தோட்டக்கலையைச் சார்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் நடந்து வருகின்றன.

4. எனவே, புதிதாக தோட்டக்கலைக் கல்விக்கென பல்கலைக்கழகம் நிறுவ போதிய இடம், நிதி வசதி கணிசமான அளவு தேவைப்படுவதாலும், தோட்டக்கலைக் கல்வி பயிலும் 1,040 மாணவர்களுக்கெனவும் தனியாக ஒரு தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் ஏற்படுத்த வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே மா, பலா, வாழை, தென்னை, காலிஃப்ளவர், கேரட் உள்ளிட்ட 64 வகையான தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்பட்டு விளைவிக்கப்படுகின்றன. அதன்காரணமாக, ஒட்டுமொத்தமாக கிருஷ்ணகிரி மாவட்டத்திலே பழப் பயிர்கள் 36,160 ஹெக்டேர் பரப்பளவிலும், காய்கறிகள் 13,107 ஹெக்டேர் நிலப்பரப்பிலும், வாசனைப் பயிர்கள் 3,410 ஹெக்டேர்

நிலப்பரப்பிலும், மலைத் தோட்டப் பயிர்கள் 24 ஹெக்டேர் நிலப்பரப்பிலும், மருத்துவப் பயிர்கள் 52 ஹெக்டேர் நிலப்பரப்பிலும், மலர்கள் 3,038 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் ஆக மொத்தம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் தோட்டக்கலைப் பயிர்கள் மட்டும் 55,791 ஹெக்டேர் பரப்பளவிலே பயிரிடப்படுகின்றன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், 2006–2011–ல் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் நடைபெற்ற எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே 7–1–2011 அன்று சட்டப் பேரவையிலே மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையிலே 'தோட்டக்கலைக்கு என தனியே தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் ஒன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு தொடங்கப்படும்' என அறிவித்தார்கள். மேலும், தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் துவங்குவதற்காக அரசாணை எண் 47, வேளாண்மை தோட்டக்கலைத் துறையின்படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்கத்தின் திட்ட அலுவலர் முனைவர் இ. வடிவேலு அவர்களை கிருஷ்ணகிரி மாவட்டம், ஜியனூரிலே பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான அடிப்படைப் பணிகளை மேற்கொள்ள தனி அலுவலராக அரசு நியமித்து ஆணை பிறப்பித்தது. ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய பணிகள் அப்படியே நின்றுவிட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்துள்ள விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இடம் தேவை என்று சொல்லியிருக்கின்றார்கள். கிருஷ்ணகிரியை ஒட்டியுள்ள பழத் தோட்டம் பகுதியிலே, சுமார் 200 ஏக்கர் அளவிற்கு அரசுக்குச் சொந்தமான தோட்டக்கலைத் துறையின் இடம் இருக்கின்றது. அதேபோல, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேப்பனஹள்ளி ஒன்றியம், ஜியனூர் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் சுமார் 500 ஏக்கர் இடம் இருக்கின்றது. ஆகவே, இந்த இடத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தோட்டக்கலைப் பல்கலைக்கழகத்தை அமைத்துத் தர வேண்டுமென அவருடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட வேளாண்மை தோட்டக்கலைப்

பல்கலைக்கழகம் சம்பந்தமான இந்த வேண்டுகோளை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் முன்பே வைத்திருந்தார்கள். அவருக்கும் சேர்த்து இப்போது இந்த பதிலை நான் இங்கே அளிக்க விழைகிறேன்.

முற்பகல் 11–40

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் கோயம்புத்தூர், பெரியகுளம் மற்றும் மகளிருக்கான தோட்டக்கலைக் கல்லூரி திருச்சிராப்பள்ளியிலும் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஒவ்வொரு வருடமும் ஏறக்குறைய 260 மாணவர்கள் பயின்று பட்டம் பெற்று வருகின்றனர். இப்பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கிவரும் பட்டயப் படிப்பு நிறுவனமான பேச்சிப்பாறையில் ஆண்டுதோறும் ஏறக்குறைய 40 மாணவர்கள் தோட்டக்கலை பட்டயக் கல்வி பெற்று வருகின்றனர். மேலும், இப்பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கிவரும் இணைப்புக் கல்லூரியான ஆதிபராசக்தி தோட்டக்கலைக் கல்லூரியில் வருடாவருடம் 100 மாணவர்கள் பயின்று தோட்டக்கலை இளங்கலைப் பட்டம் பெற்று வருகின்றனர். ஆக, தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் 3 தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களும் மற்றும் பேச்சிப்பாறை ஆராய்ச்சி நிலையத்திலுள்ள தோட்டக்கலை பட்டயப் படிப்பு நிறுவனத்தில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,040 மாணவர்கள் தோட்டக்கலைக் கல்வியைப் பயின்று வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு உயரிய விதை ரகங்கள் வருடா வருடம் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியிடப்பட்டு, விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை சீரிய முறையில் மேற்கொள்ள, தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சிப் பணிகள், வேளாண் துறையில் ஈடுபட்டுள்ள உழவர்களுக்குத் தேவையான நவீன வேளாண் யுக்திகளை வழங்க ஏதுவான பணிகள் இப்பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கிவரும் தமிழகத்தில், கொடைக்கானல், ஏற்காடு, தடியன்குடிசை (திண்டுக்கல்), பேச்சிப்பாறை, உதகமண்டலம் ஆகிய இடங்களில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்களும்

2017 ஜூலை 10] [திரு. இரா. துரைக்கண்ணு]

தேனி மாவட்டம், மலிங்காபுரத்தில் திராட்சை ஆராய்ச்சி நிலையமும், திருநெல்வேலி மாவட்டம், வனிக்கோனேந்தலில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் மேற்கூறிய 4 தோட்டக்கலைக் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் பாப்பாரபட்டி, சந்தியூர், திண்டிவனம், விரிஞ்சிபுரம் ஆகிய 4 இடங்களில் செயல்பட்டுவரும் வேளாண் அறிவியல் நிலையங்களில் (K.V.K.) சிறந்த முறையில் தோட்டக்கலையைச் சேர்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் நடந்து வருகின்றன. எனவே, புதிதாக தோட்டக்கலைக் கல்விக்கென பல்கலைக்கழகம் நிறுவ போதிய இடம், நிதி வசதி, கணிசமான அளவுக்குத் தேவைப்படுவதாலும், தோட்டக்கலைக் கல்வி பயிலும் 1,040 மாணவர்களுக்கென தனியாக ஒரு தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் ஏற்படுத்த வேண்டிய நிலை அரசிடம் தற்போது இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அறிவிக்கப்பட்டதோடு சரி. அதற்குப் பிறகு தேர்தல் வந்த காரணத்தினால் அந்த அறிவிப்புகள் அத்தனையும் இரத்து செய்யப்பட்டு விட்டன. இருந்தாலும், அந்த இடத்தினுடைய நிலைமையைக் கருதி தமிழ், ஆங்கிலம், புள்ளியியல், கணிதம், பயிர்பானவியல், பூச்சியியல் மற்றும் நோயியல், வேளாண்மைப் பொறியியல் மற்றும் சமூகவியல் ஆகிய துறைகள் தோட்டக்கலை மற்றும் வேளாண்மைக் கல்லூரிகளுக்குப் பாடங்களை நடத்தி வருகின்றன. தனியாக தோட்டக்கலைக்கென பல்கலைக்கழகம் நிறுவ, மேற்கூறிய துறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்களில் பணிபுரிய சார்புப் பணியாளர்கள் தனியே தேவைப்படுவர். மேற்கூறிய காரணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, அரசுக்கு அதிகப்படியான நிதிச் சுமை ஏற்படும் என்கின்ற காரணத்தினால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிதாக தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்குட்டுவன், அதுதான் அமைச்சர் விவரமாகச் சொல்லிவிட்டாரே! (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்லூரிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்பது வேளாண்மைப் பல்கலைக்கழகம். வேளாண்மைப் பல்லைக்கழகம் அமைப்பதற்கு நல்ல மண் வளம் எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், உறுப்பினர் பேசி முடிக்கட்டும்.

திரு. டி. செங்குட்டுவன்: வேளாண்மைப் பல்லைக்கழகம் அமைப்பதற்கு நல்ல மண் வளம் எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிறது. தட்பவெப்ப நிலை தோட்டக்கலைப் பயிர்களுக்கு ஏதுவாக உள்ளது. வருடம் முழுவதும் பயிர் விளைச்சலுக்கு ஏற்ற மண் வளம் இருக்கிறது. G–9 என்னும் பச்சை வாழை, ஏலக்கி, பூவன், மொந்தன் போன்ற வாழைப்பழங்கள் விளைகின்றன. ரோஜா மலர் சாகுபடியிலே உலகத்தரம் வாய்ந்த பூ உற்பத்தி செய்யப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், இம்மாவட்டத்தையொட்டி, பெங்களூரு, ஹைதராபாத் போன்ற பெருநகரங்கள் அமைந்துள்ளன. 73 மாம்பழக்கூழ் தொழிற்சாலைகள் இந்த மாவட்டத்தில் இருக்கின்றன. அதைத்தாண்டி, I.C.A.R.–Indian Council for Agricultural Research போன்ற தேர்வுகளுக்காக அகில இந்திய அளவிலே உயர் படிப்புக்காக தமிழ்நாட்டுக்கு வரும்போது, கிருஷ்ணகிரியிலே தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் இருந்தால் அது பயனுள்ளதாக இருக்கும். வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனைப் படிப்புக்கு இந்த மாவட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தை அவசியம் எங்களுடைய கிருஷ்ணகிரி மாவட்டத்திலே அமைத்துத் தர வேண்டுமென்று உங்கள் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொன்னது, பல்கலைக்கழகம் அமைப்பது சம்பந்தமாகத்தான். ஏனென்று சொன்னால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைத் தோட்டக்கலை, வேளாண்மைப்

2017 ஜூலை 10] [திரு. இரா. துரைக்கண்ணு]

பொறியியல், வனவியல் மற்றும் மனையியல் போன்ற பல்வேறு அறிவியல் துறைகளைக் கொண்டு செயல்படுவதால் பல்கலைக்கழக அந்தஸ்தினைப் பெற்றுள்ளது. தனித்தனியே பல்கலைக்கழகங்களாக துறைகள் பிரித்துத் துவங்கப்பட்டால், கல்லூரி அந்தஸ்தினை மட்டுமே பெற இயலும். பல்கலைக்கழக அந்தஸ்து மற்றும் அதற்கான முக்கியத்துவம் பெற முடியாது. ஆகவேதான், இத்தனையையும் சேர்த்து பல்கலைக்கழகமாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தனியாக தோட்டக்கலைக்கென ஒரு பல்கலைக்கழகம் அமைக்க போதிய சாத்தியக்கூறுகள் அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு எல்லை வரையறை ஆணைய சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு எல்லை வரையறை ஆணைய சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–45

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு எல்லை வரையறை ஆணைய சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. உ. மதிவாணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப நிலையிலேயே இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*